சுருக்கம்

தேர்தல் – உள்ளாட்சித் தேர்தல் 2016 – ஊராட்சித் தேர்தல் பணிகள் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 903 பணியிடங்கள் தோற்றுவித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ.1) துறை

அரசாணை (நிலை) எண்.85 நாள்: 22.07.2016.

படிக்கப்பட்டவை:

இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், அவர்களின் கடிதம் எண்.24644/2016/எப்1, நாள் 04.05.2016.

* * * * * *

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாட்டில் உள்ள மூன்று வகை ஊராட்சிகளின் அமைப்புகளுக்கு சாதாரணத் தேர்தல் 2016–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற உள்ளது என்றும், இத்தேர்தலையொட்டி ஊராட்சித் தேர்தல் பணிகளைக் கவனிக்க கீழ்காணும் பணியிடங்களைத் தோற்றுவிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:–

| வ. எண் | பதவிகளின் பெயர்கள் | பணியிட எண்ணிக்கை | ஊதிய விகிதம் (ரூபாய்) |
|---|---|---|---|
| (அ) | ஊரக வளர்ச்சி இயக்ககம் | | |
| | 1. உதவி இயக்குநர் | 1 | ரூ.15600–39100+5400 தர ஊதியம் |
| | 2. வட்டார வளர்ச்சி அலுவலர் | 1 | ரூ.9300–34800+5100 தர ஊதியம் + 1000 சிறப்பு ஊதியம் |
| | 3. உதவியாளர் | 3 | ரூ.5200–20200+2800 தர ஊதியம் |
| | 4. கணினி இயக்குபவர் | 1 | ரூ.11000/– தொகுப்பூதிய அடிப்படையில் |
| | மொத்தம் | 6 | |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (வளர்ச்சி பிரிவு)<br><br>1. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் | 31 | ரூ.15600–39100+5400 தர ஊதியம் |
| | 2. வட்டார வளர்ச்சி அலுவலர் | 31 + 1 (விழுப்புரம் மாவட்டத்திற்கு ஒரு கூடுதல் பணியிடம்) | ரூ.9300–34800+5100 தர ஊதியம் + ரூ. 1000 சிறப்பு ஊதியம் |
| | 3. உதவியாளர் | 31 + 1 (விழுப்புரம் மாவட்டத்திற்கு ஒரு கூடுதல் பணியிடம்) | ரூ.5200–20200+2800 தர ஊதியம் |
| | 4. கணினி இயக்குபவர் | 31 + 1 (விழுப்புரம் மாவட்டத்திற்கு ஒரு கூடுதல் பணியிடம்) | ரூ.11000/– தொகுப்பூதிய அடிப்படையில் |
| | மொத்தம் | 127 | |
| (இ) | ஊராட்சி ஒன்றியங்கள்<br><br>1. உதவியாளர் | 385 | ரூ.5200–20200+2800 தர ஊதியம் |
| | 2. கணினி இயக்குபவர் | 385 | ரூ.11000/– தொகுப்பூதிய அடிப்படையில் |
| | மொத்தம் | 770 | |
| ஆக மொத்தம் (அ + ஆ + இ) | | 903 | |

2. இப்பணியிடங்கள் தற்போதுள்ள மாவட்டங்கள் / ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன என்றும், மேற்குறிப்பிட்ட பணியிடங்களை 01.06.2016 முதல் ஓராண்டு காலத்திற்குத் தோற்றுவித்து ஆணை பிறப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அனுப்பி வைத்த செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. அதனடிப்படையில் கீழ்க்குறிப்பிட்ட பணியிடங்களை இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் 31.12.2016 வரை தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது:–

| வ. எண் | பதவிகளின் பெயர்கள் | பணியிட எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| (அ) | <u>ஊரக வளர்ச்சி இயக்ககம்</u><br><br>1. உதவி இயக்குநர் | 1 | ரூ.15600–39100+5400 தர ஊதியம் |
| | 2. வட்டார வளர்ச்சி அலுவலர் | 1 | ரூ.9300–34800+5100 தர ஊதியம் + ரூ. 1000 சிறப்பு ஊதியம் |
| | 3. உதவியாளர் | 3 | ரூ.5200–20200+2800 தர ஊதியம் |
| | 4. கணினி இயக்குபவர் | 1 | ரூ.11000/– தொகுப்பூதிய அடிப்படையில் |
| | மொத்தம் | 6 | |
| (ஆ) | <u>மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (வளர்ச்சி பிரிவு)</u><br><br>1. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் | 31 | ரூ.15600–39100+5400 தர ஊதியம் |
| | 2. வட்டார வளர்ச்சி அலுவலர் | 31 + 1 (விழுப்புரம் மாவட்டத்திற்கு ஒரு கூடுதல் பணியிடம்) | ரூ.9300–34800+5100 தர ஊதியம் + 1000 சிறப்பு ஊதியம் |
| | 3. உதவியாளர் | 31 + 1 (விழுப்புரம் மாவட்டத்திற்கு ஒரு கூடுதல் பணியிடம்) | ரூ.5200–20200+2800 தர ஊதியம் |
| | 4. கணினி இயக்குபவர் | 31 + 1 (விழுப்புரம் மாவட்டத்திற்கு ஒரு கூடுதல் பணியிடம்) | ரூ.11000/– தொகுப்பூதிய அடிப்படையில் |
| | மொத்தம் | 127 | |
| (இ) | <u>ஊராட்சி ஒன்றியங்கள்</u><br><br>1. உதவியாளர் | 385 | ரூ.5200–20200+2800 தர ஊதியம் |
| | 2. கணினி இயக்குபவர் | 385 | ரூ.11000/– தொகுப்பூதிய அடிப்படையில் |
| | மொத்தம் | 770 | |
| ஆக மொத்தம் (அ + ஆ + இ) | | 903 | |

4. மேலே பத்தி 3–ல் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டன:–

(i) மேற்கண்ட பணியிடங்களுக்கான செலவினம் 'புதுப்பணி'யாக கருதப்பட வேண்டும்.

(ii) மேற்கண்ட பணியிடங்கள் பணிமாற்று முறை மற்றும் உரிய பணியமர்த்தல் மற்றும் தற்போதுள்ள நடைமுறை விதிகளின்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

(iii) பணியிடங்கள் 31.12.2016 பிற்பகல் முதல் தாமாக முடிவுற்றதாகக் கருதப்பட வேண்டும்.

5. மேற்கண்ட பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

| 2515.00 | ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் | (ரூபாய்) |
|---|---|---|
| 001. | நெறிப்படுத்தலும் நிருவாகமும்<br>I. திட்டத்தில் சேராதது<br>AA. ஊரக வளர்ச்சி இயக்ககம்<br>01. சம்பளங்கள் – 01. அடிப்படைச் சம்பளம்<br>(த.தொ.கு.2515–00–001 AA-0119) | 6,44,400 |
| | 03. அகவிலைப்படி – 01. அகவிலைப்படி<br>(த.தொ.கு.2515–00–001 AA-0315) | 7,98,006 |
| | 33. தொழில்முறை சிறப்பு பணிகளுக்கு தொகை கொடுத்தல் – 04. ஒப்பந்த ஊதியம்<br>(த.தொ.கு.2515–00–001 AA-3349) | 66,000 |
| | AC. மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் வளர்ச்சிப் பணியாளர்கள்<br>01. சம்பளங்கள் – 01. அடிப்படைச் சம்பளம்<br>(த.தொ.கு.2515–00–001 AC-0115) | 1,44,72,300 |
| | 03. அகவிலைப்படி – 01. அகவிலைப்படி<br>(த.தொ.கு.2515–00–001 AC-0311) | 1,78,50,564 |
| | 33. தொழில்முறை சிறப்பு பணிகளுக்கு தொகை கொடுத்தல் - 04. ஒப்பந்த ஊதியம்<br>(த.தொ.கு.2515–00–001 AC-3345) | 2,11,2000 |
| | AE.வட்டார தலைமையிடங்கள் – வட்டார ஊராட்சிகள் | |
| | 01. சம்பளங்கள் – 01 அடிப்படைச் சம்பளம்<br>(த.தொ.கு.2515–00–001 AE-0111) | 3,58,05,000 |
| | 03. அகவிலைப்படி – 01. அகவிலைப்படி<br>(த.தொ.கு.2515–00–001 AE-0317) | 4,47,56,250 |
| | 33. தொழில்முறை சிறப்பு பணிகளுக்கு தொகை கொடுத்தல் - 04. ஒப்பந்த ஊதியம்<br>(த.தொ.கு.2515–00–001 AE-3341) | 2,54,10,000 |
| | மொத்தம் | 14,19,14,520 |

(ரூபாய் பதினான்கு கோடியே பத்தொன்பது இலட்சத்து பதினான்காயிரத்து ஐநூற்று இருபது மட்டும்)

**6.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அலுவலகத்தில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக உதவியாளர்களும் (தேர்தல்), ஊராட்சி ஒன்றியங்களில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கு அந்தந்த ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும் ஊதியம் மற்றும் படிகளுக்கான பட்டியல்கள் தயாரித்து ஏற்பளிப்பு வழங்குவதற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. பத்தி 3–ல் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கான செலவினம் 'புதுப்பணி'யாகும். (New Service) இச்செலவினத்திற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இப்பணியிடங்களுக்கான செலவினத்தை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (BG.I) துறையினால் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினத்திற்கான தொகையை வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் நிதித் (BG.I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**8.** இச்செலவினம் குறித்து சட்டப்பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, **2016–2017–ம்** ஆண்டுக்கான துணை மதிப்பீட்டில் (Supplementary Estimate) சேர்ப்பது குறித்து உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்புமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**9.** இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.41353/மைமஆபி/ நாள் 22.07.2016–இல் பெறப்பட்ட இசைவு மற்றும் கூ.நி.ஒ.பே.எண்.475 (நானூற்று எழுபத்தைந்து) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15.
செயலாளர், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், சென்னை–106.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக)
மாநிலக் கணக்காயர், (A&E), சென்னை–18.
மாநிலக் கணக்காயர், (A&E), சென்னை–18. (பெயரில்)
மாநிலக் கணக்காயர், (தணிக்கை), சென்னை–35.
மாநிலக் கணக்காயர், (தணிக்கை), சென்னை–35. (பெயரில்)
கருவூல கணக்கு இயக்குநர், சென்னை – 25.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–09/18/35.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–108.
அனைத்து மாவட்ட கருவூலக் கணக்கு அலுவலர்கள்.
<u>நகல்</u>
நிதித் (ஊ.வ./வ.செ.பொ.I/ ஊ.வ./வ.செ.பொ.II) துறை, சென்னை–09.

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–09.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–09.
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–09.
நிதித் துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–09.
அனைத்துப் பிரிவுகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–09.
இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையம், மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

22/7